## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| 2023-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ம் நாள் திங்கள்கிழமை வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | கணேசன் | தொழில் : | |
| த.பெ: | இருளப்பன் | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**14.8.2023 OS No.109/2019 வா.சா.2** கணேசன் **ஆஜர்**
**குறுக்கு விசாரணை:**

1. வாதி மாசாணம் எனக்கு மச்சினன் முறை என்றால் சரிதான். அவர் என் அக்காவை திருமணம் செய்துள்ளார். வழக்கு தாக்கல் செய்த காலத்தில் வழக்கறிஞருக்கு வழக்கு விபரங்கள் நான் சொன்னேன் என்றால் நான் சொல்லவில்லை. என்னென்ன சர்வே எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் புல எண்.239/9, புல எண்.239/8, புல எண். 239/7 ஆகும். மேற்படி சொத்துக்களுக்கு தனிதனியாக விஸ்தீரணம், நான்குமால் தெரியுமா என்றால் விஸ்தீரணம் தெரியும், நான்குமால் விபரம் தெரியாது.

2. ஏற்கனவே என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும், தற்போது என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் எனக்கு தெரியாது. பூலாவடி புஞ்சை என்பது எத்தனையாவது லக்க சொத்து என்று தெரியுமா என்றால் 2வது லக்க சொத்தாகும். 2வது லக்க சொத்தின் மேல்புறத்தில்தான் பிரவாதிகள் கட்டியுள்ள வீடுகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீடுகள் மானாமதுரை வட்ட கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கி கட்டப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3. 2004-ல் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் மூலம் பிரதிவாதிகளால் வீடு கட்டப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எத்தனை வருடமாக வேலாங்குளம் கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால் பிறந்தது முதல் அங்குதான் வசித்துவருகிறேன். எனக்கு எத்தனை வயது என்றால் 58 வயது ஆகும். எனக்கு 10 வயதில் விபரம் தெரிந்த காலம் முதல் தாவா சொத்தில் என்னென்ன வீடு, தோப்பு உள்ளது என்று எனக்கு நேரடியாக தெரியும் என்றால் தெரியும். மாரநாடு கால்வாய்க்கும் மேற்கே எனக்கு சொத்து உள்ளது என்றால் சரிதான்.

4. 2ம் லக்க சொத்து மாரநாடு கல்வாய்க்கும் கிழக்கே உள்ளது என்றால் சரிதான். 2ம் லக்க சொத்தில் 2004-ல் பிரவாதிகள் கட்டியுள்ள வீடுகளுக்கு 2004முதல் வீட்டு வரி ஏற்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது.

பிரதிவாதிகளுக்கு 2ம்லக்க சொத்தில் உள்ள வீட்டு முகவரியில்தான் ஆதார்அட்டை, குடும்ப அட்டை மற்றும் வாக்காளர் அட்டை போன்ற ஆவணங்கள் பதிவாகியுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5. நான் தாக்கல் செய்துள்ள நிருபணவாக்குமூலத்தில் 2ம் லக்க சொத்தில் கீழ்புறம் உள்ள 60 செண்டை மாசாணம் தன் வசம் வைத்துக்கொண்டு மேல்புறம் 22செண்டை மாசாணம் மகன் நாகராஜனுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 2ம் லக்க சொத்தில் கீழ்புறம் உள்ள 60 செண்டை மாசாணம் தன் வசம் வைத்துக்கொண்டு மேல்புறம் 22செண்டை மாசாணம் மகன் நாகராஜனுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்ற விபரத்தை நான் நிருபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அவ்வாறு நிருபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டு தாவா 2வது லக்க சொத்தில் 22 செண்டை மாசாணம் நாகராஜனுக்கு சொல்லாமல் மறைத்ததற்கு காரணம் ஏதாவது உள்ளதா என்றால் எந்த வித காரணமும் இல்லை.

6. நிருபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள தாவா 2 வது லக்க சொத்தில் உள்ள பிரதிவாதி கட்டியுள்ள வீட்டிற்கு அடி அளவுகள் யார் சொன்னது என்றால் நானாகதான் சொல்லியுள்ளேன். அளந்து பார்க்கவில்லை. 2 வது லக்க சொத்தில் பிரதிவாதிகள் கட்டியுள்ள வீடுகளுக்கு அருகே தென்னைமரங்கள், வேலிக்கருவேலை உள்ளது என்றால் சரிதான். அது எத்தனை மரங்கள் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தாவா 2 வது லக்க சொத்தில் உள்ள பிரதிவாதி கட்டியுள்ள தார்சு வீட்டிற்கு மேற்கே 2 ஓட்டு வீடுகள் உள்ளதா என்றால் அது ஓட்டு வீடுகள் இல்லை ஓட்டு தாழ்வார மாட்டு கொட்டங்கள் ஆகும்.

7. ஓட்டு தாழ்வாரத்தில் பிரதிவாதிகளின் சகோதரி, தாயார் குடியிருந்து வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிருபணவாக்குமூலத்தில் அத்துமீறி பிரதிவாதிகள் 2ம் லக்க சொத்தில் வீடு கட்டியுள்ளார்கள் என்று சொல்லியுள்ளதில் எத்தனை வருடம் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. பிரதிவாதிகள் 2ம் லக்க சொத்தில் வீடு கட்டியுள்ள விபரம் 2004லியே தெரியும் என்றால் எனக்கு தெரியாது. ஆணையர் பார்வையிடும்போதுதான் தெரியவந்தது. 2ம் லக்க சொத்து பொறுத்து மாசாணம் என்னென்ன ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

8. நான் தாக்கல் செய்துள்ள நிருபணவாக்குமூலத்தில் புல எண்.213/10ஐ வாதிக்கு கிரையம் கொடுத்ததாக சொல்லியுள்ளதில் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. அந்த ஆவணம் யாரிடம் உள்ளது என்றால் அதுவும் எனக்கு தெரியாது. கிரையம் கொடுத்தவரிடம்தான் இருக்கும். நான் தாக்கல்

செய்துள்ள நிருபணவாக்குமூலத்தில் ஆழ்துளை கிணறு, மோட்டார் என்று சொல்லியுள்ளதில் ஆழ்துளை கிணறு எத்தனை வருடமாக உள்ளது என்றால் அது 6-7 வருடமாக உள்ளது. அதற்கான மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் மாசாணம் பெயரில்தான் உள்ளது.

9. ஆழ்துளை கிணறு ஆனது தாவா 2-ம் லக்க சொத்தின் கீழ்புறம் உள்ளது என்றால் சரியல்ல. அது வீட்டை ஒட்டியுள்ளது. ஆழ்துளை கிணறு பிரதிவாதிகள் அமைத்தார்கள் என்றும் அதனால் அவர்கள் பெயரில் மின் இணைப்பு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. மின் இணைப்பு அனைத்தும் மாசாணம் பெயரில்தான் உள்ளது. அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளாரா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா 2ம் லக்க சொத்தில் பிரதிவாதிகள் கூட்டுறவு வீடு சங்கத்தில் கடன் வாங்கி 2004ம் வருடமே பிரதிவாதிகள் வீடுகள் கட்டியுள்ளார்கள் என்ற விபரம் தாவா சொத்திற்கு அருகில் சொத்து உள்ள எனக்கு தெரியும் என்றாலும் தற்போது மாசாணம் கேட்டுக்கொண்டதற்கு ஆதரவாக மாசாணம் என் மச்சினன் என்பதால் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken down by me in open court
read over/ interpreted to the witness
in Tamil and acknowledged by him,
her to be correct.

District Munsif Cum
Judicial Magistrate,
Thiruppuvanam.